Registered as a News paper    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 24    (09-11-93)    செவ்வாய்க்கிழமை    ஓசை 264

## சிங்கள இளைஞர்களுக்கு இப்படியும் ஒரு சோதனை

கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் இடம்பெற்று வரும் சுற்றிவளைப்பு,சோதனைகள், வாகனச் சோதனைகளின் போது சிங்கள இளைஞர்கள் புது வகை தொல்லை யொன்றிற்கு உள்ளாகி வருகின்றனர். சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படும் அதே வேளை சிங்கள இளைஞர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிசார் சிங்கள இளைஞர்களின் 'சுய வரலாற்றை' வருடம் தப்பாதுகூறுமாறு நிர்ப்பந்திக்கின்றனராம். குறிப்பிட்ட சிங்கள இளைஞர் இராணுவத்திலிருந்து தப்பிஓடி வந்தவரா? என்பதை அறியவே இவ்வாறு வரலாற்றைக் கூறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என கூறப்படுகிறது.

# புலிகளை விரைவில் வெற்றிகொள்ள இராணுவத்தில் பாரிய மாற்றம் தேவை!

## அகன்ற திரையில் ஒளிவீச்சு

(யாழ்ப்பாணம்)

செப்டம்பர் மாத ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை இன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

வழமையாக காண்பிக்கப்படும் அமலன் அரங்கில் அல்லாமல் இம்முறை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 5.00 மணிக்கு காண்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடியோ சஞ்சிகையில் 'யாழ்தேவி' இராணுவ

(3ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிக்கச் சென்றவர் படையிடம் சிக்கினார்

(குருநகர்)

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் மண்டைதீவு-கழுவந்தீவு பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா ராணுவம் சுட்டதில் குருநகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் காயமடைந்ததுடன் ராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

அவருடன் தொழிலுக்கு சென்ற குருநகரைச் சேர்ந்த மற்றுமிரு மீனவர்கள் சம்பவத்தில் தப்பிவந்து மேற்படி தகவலைத் தெரிவித்தனர்

காயமடைந்ததுடன் ராணுவத்திடம் சிக்கிக் கொண்டவர் குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை ரவீந்திரன் (சம்மாட்டி வயது 35) எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் சசி, பத்திமா கொலின் ஆகிய மீனவர்கள் மேற்படி சமபவத்தில் தப்பிக் கரைவந்து சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் சென்ற வள்ளம் மற்றும் தொழில் உபகரணங்கள் ராணுவத்தினரிடம் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பத்திமா கொலின் என்பவர் விபரிக்கையில்

''நாங்கள் மண்டைதீவு - கழுவந்தீவுக் கரையை அண்மித்த பகுதியில் தொழிலில் ஈடுபட்டு நின்றோம் திடீரென வெடிச்சத்தங்கள் கேட்டுப் பார்த்தபோது ரவீந்திரன் நின்ற பகுதியை நோக்கிச் சூடுகள் சென்றதைக் கண்டேன். மறுபகுதியில் நின்ற நானும் சசியும் கடலில் பாய்ந்து மூழ்கினோம். எம்மை நோக்கியும் சூடுகள் வந்தன ஆழ்கடல் பகுதியை நோக்கி நகர்ந்து நானும் மற்றவரும்

( 3 ஆம் பககம் பார்க்க )

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இராணுவம் தனது இலக்கை மிக விரைவில் அடைய வேண்டுமானால் இராணுவத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இதேவேளை இதற்கான முயற்சிகள் மிக விரைவாகத் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இவ்வாறு சிறிலங்காவின் இராணுவத் தளபதி சிசில வைத்தியரெட்னா தெரிவித்துள்ளார்.**

இராணுவ வாரம் தொடர்பாக நடைபெற்ற இராணுவ உயர் அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் பேசும்போதே லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், 'பயங்கரவாதிகள்' இடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்திற்கென பொலிசாரிடம் ஒப்படைக்கப்படும் என்றும், ஆனால், சில இராணுவ முகாங்கள் அப்பகுதியில் இருக்கும் என்றும், இங்குள்ள இராணுவத்தினர் பொலிசாருடன் இணைந்து செயற்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கைபற்றி தற்பொழுது எதுவும் தெரிவிக்க முடியாது எனக் கூறிய சிசில் வைத்தியரெட்னா, ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்தார்.

ஊர்காவல்படை, தொண்டர்படையைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஒன்று தற்போது தயாரிக்கப்படுவதாக

(3ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் உரை பி. பி. ஸிக்கு கிடைத்ததாம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அண்மையில் ஆற்றிய உரையொன்றின் நகல் தமக்கு கிடைத்துள்ளதாக பி பி ஸி தெரிவித்துள்ளது. இதில் பிரபாகரன் அவர்கள் அரசின் கடும்போக்கு காரணமாக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேலும் சமாதானப்பேச்சு வார்த்தைகள் நடக்கக்கூடிய ஏதுநிலை இல்லை என கூறியுள்ளார் என தெரிவித்துள்ளது.

இது குறித்து பி பி ஸி மேலும் கூறுகையில் ''ஜனாதிபதி விஜேதுங்க இனப்பிரச்சினையை வெறும் பயங்கரவாதப் பிரச்சினை என மீண்டும் மீண்டும் விபரித்து வருகிறார். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் இப்பொழுது ஆற்றியிருக்கும் உரை விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தக்கூடிய ஏதுநிலை இல்லை என கருதுகின்றார்கள் என்பதை முதன் முதலாக காட்டிநிற்கிறது.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் மீது இராணுவத்தினர் அண்மையில் எடுத்த தாக்குதல் நடவடிக்கை முடிவடைந்த தற்குச்சற்றுப் பின்னர் பிரபாகரன் அவர்கள் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். வடக்கு-கிழக்கிலுள்ள மக்களை ஆயுதம் ஏந்தும்படியும் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார். போருக்கு சமாதானத் தீர்வு ஏற்படும் என தமிழ் மக்கள் சிந்திக்கக் கூடாது என்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கமாட்டாது இராணுவத்தீர்வுதான் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அரசு தெள்ளத் தெளிவாக கோடிகாட்டியிருக்கிறது என்றும் அவர் தனது உரையில் கூறியுள்ளார் என விபரித்துள்ளது

## யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானத் தீர்வு காண்க

### கனேடிய சட்டத்தரணி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை

தாய்நாட்டை நேசிக்கும் எந்தவொரு தலைவரும் தனது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவே நாட்டம்

ளார்.

புலிகளுக்கும் அரசிற்குமிடையில் சமாதான முயற்சிகளை ஏற்படுத்த அமைச்சர்

## காந்திபுரம் கிராமத்தில் நான்கு பெண்கள் கைது

மட்டக்களப்பு காந்திபுரம் கிராமத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். தேடுதலின்போது

வர் கைது செய்யப்பட்டார் அவரும் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

சென்ற மாதம் 30ஆம் திகதி

## பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

1.6.1993-இல் இருந்து

ள வட்டாரங்கள் தெரிவித்தன.

...துடன் ராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

அவருடன் தொழிலுக்கு சென்ற குருநகரைச் சேர்ந்த மற்றுமிரு மீனவர்கள் சம்பவத்தில் தப்பிவந்து மேற்படி தகவலைத் தெரிவித்தனர்

காயமடைந்ததுடன் ராணுவத்திடம் சிக்கிக் கொண்டவர் குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை ரவீந்திரன் (சம்மாட்டி வயது 35) எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் சசி, பத்திமா

இச்சம்பவம் குறித்து பத்திமா கொலின் என்பவர் விபரிக்கையில்

''நாங்கள் மண்டைதீவு - கழுவந்தீவுக் கரையை அண்மித்த பகுதியில் தொழிலில் ஈடுபட்டு நின்றோம் திடீரென வெடிச்சத்தங்கள் கேட்டுப் பார்த்தபோது ரவீந்திரன் நின்ற பகுதியை நோக்கிச் சூடுகள் சென்றதைக் கண்டேன். மறுபகுதியில் நின்ற நானும் சசியும் கடலில் பாய்ந்து மூழ்கினோம். எம்மை நோக்கியும் சூடுகள் வந்தன ஆழ்கடல் பகுதியை நோக்கி நகர்ந்து நானும் மற்றவரும்

( 3 ஆம் பககம் பார்க்க )

...ஒன்றில் பேசும்போதே லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், 'பயங்கரவாதிகள்' இடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்திற்கென பொலிசாரி

...கும் என்றும், இங்குள்ள இராணுவத்தினர் பொலிசாருடன் இணைந்து செயற்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கை பற்றி தற்பொழுது எதுவும் தெரிவிக்க முடியாது எனக் கூறிய சிசில்

...தொடரும் எனவும் ...தார்.

ஊர்காவல்படை, தொண்டர்படையைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஒன்று தற்போது தயாரிக்கப்படுவதாக

(3ஆம் பக்கம் பார்க்க)

...ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் இப்பொழுது ஆற்றியிருக்கும் உரை விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடிய ஏதுநிலை இல்லை என கருதுகின்றார்கள் என்பதை முதன் முதலாக காட்டிநிற்கிறது.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் மீது இராணுவத்தினர் அண்மையில எடுத்த தாக்குதல் நடவடிக்கை முடிவடைந்த தற்குச்சற்றுப் பின்னர் பிரபாகரன் அவர்கள் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். வடக்கு-கிழக்கிலுள்ள மக்களை ஆயுதம் ஏந்தும்படியும் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார். போருக்கு சமாதானத் தீர்வு ஏற்படும் என தமிழ் மக்கள் சிந்திக்கக் கூடாது என்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கமாட்டாது இராணுவத்தீர்வுதான் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அரசு தெள்ளத் தெளிவாக கோடிகாட்டியிருக்கிறது என்றும் அவர் தனது உரையில் கூறியுள்ளார் என விபரித்துள்ளது

# பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

1.6.1993-இல் இருந்து பதில் அதிபர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர அதிபர் நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அந்தந்தப் பகுதி கோட்டங்களிற்கு கல்விச்சேவை சபையினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை ஆகிய கோட்டங்கள் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்காமையை அடுத்து அப் பகுதிகளில் பதில் அதிபர்களாக கடமையாற்றுவோரின் நிரந்தர நியமனம் மேலும் தாமதமாகுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானத் தீர்வு காண்க

## கனேடிய சட்டத்தரணி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை எட்டுமாறு கனடாவின் பிரபல சட்ட நிபுணர் மார்க்கஸ் செக்கர் சிறிலங்கா ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

இது குறித்து மார்க்கஸ் செக்கர் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தனது தாய்நாட்டை நேசிக்கும் எந்தவொரு தலைவரும் தனது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவே நாட்டம் கொள்வார். ஆனால் நீங்கள் போருக்குத் தயாராக உள்ளீர்கள். இதனை நீங்கள் நிறுத்தினால் மட்டுமே அமைச்சர் தொண்டமான் சமாதானத்துக்கான முயற்சிகளை ஏற்படுத்த முடியும் என்று கூறியுள்ளார்.

புலிகளுக்கும் அரசிற்குமிடையில் சமாதான முயற்சிகளை ஏற்படுத்த அமைச்சர் தொண்டமான் தயாராகவுள்ளார் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அரசு தயாராக இருந்தால் மட்டுமே தொண்டமானின் சமாதான முயற்சிகள் பயனளிக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார் செக்கர்.

# கராந்திபுரம் கிரா்மத்தில் நான்கு பெண்கள் கைது

மட்டக்களப்பு காந்திபுரம் கிராமத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். தேடுதலின்போது பலரைக் கைதுசெய்த இராணுவத்தினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

சிவமலர் (வயது37), செபமலர் [வயது18] மற்றும் அவர்களது இரு சகோதரிகளுமான நால்வருமே இராணுவத்தினரால் கைது செய்யபபட்டுள்ளனர். இவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

பழுகாமம் இராணுவ முகாம் இராணுவத்தினரால் சென்ற மாதம் 28ஆம் திகதி ஆசிரியரான வித்தியானந்தன் என்பவர் கைது செய்யப்பட்டார் அவரும் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

சென்ற மாதம் 30ஆம் திகதியன்று இதேமூகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் 2 ஆம் குறிச்சிப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி அங்குள்ள மக்கள் அனைவரையும் விசாரணைக்காககொண்டு சென்றனர்.

இதேபோன்று கடந்த திங்களன்று 40-ஆம் கிராம இராணுவ முகாம்இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்து அங்குள்ள மக்கள் அனைவரையும் கைது செய்துள்ளனர். இவர்கள் பின்னர் விடுவிக்கப் பட்டதாகத் தெரியவருகிறது.

ஹிங்குராங்கொட பகுதியில்

# கடத்தப்பட்ட தமிழ்இளைஞர் நஞ்சூட்டிக் கொலை

ஹிங்குராங்கொட பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனம் தெரியாத குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இவரைக் கடத்திச் சென்ற இக்குழுவினர் அவ் இளைஞரை சித்திரவதை செய்த பின்னர் மரத்தில் கட்டிவிட்டு விஷம் பருக்கி கொலை செய்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்

இவர் யார் என்பதை அடையாளம் காணமுடியாத அளவிற்கு சித்திரவதையினால் சடலம் உருக்குலைந்துள்ளதாகவும் இக்கொலை குறித்து தடயம் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# ராணுவ தளபதி கோரிக்கை ஒருஜனநாயக கொலை

## மகிந்தராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்த நிலைமை தொடர்பாக பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகளை தணிக்கைசெய்ய வேண்டும் என்ற இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்னாவின் கோரிக்கை மனித உரிமைகள் மறுக்கும் ஒரு செயல் மட்டுமல்ல ஜனநாயகத்தை கொலை செய்வதற்கும் ஒப்பானதாகும் இவ்வாறு பாராளுமன்ற அடிப்படை மனிதஉரிமைகள்குழுவின்செயலாளர் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில் சென்ற காலங்களில் நடைபெற்ற மனிதப்படுகொலைகள் மிரட்டல்கள் என்பவற்றால் ஏற்பட்ட பதற்றம் இன்னும் நினைவைவிட்டு விலகவில்லை இந்நிலையில் இவ்வாறாணதணிக்கையானது அதைவிட மிகமோசமான நிலைமை உருவாக வழிவகுக்கும்.

கிளாலியில் நடந்த உண்மையை வெளியிட்ட பத்திரிகையாளரும்கட்சித்தலைவரும் மிரட்டப்பட்டுள்ளனர் இதன் பின்னணியில் பார்க்கும் போது இராணுவத் தலைமைக்கு இன்று தேவைப்படுவது யுத்தத்தின் உண்மைநிலையை மக்களுக்கு மறைப்பதாகும்

இராணுவத்தினரின் இரகசியங்களை வெளியிடுவது தவ

(3ஆம் பக்கம் பார்க்க)

# பொறியியல் பிரிவு சிப்பாய் பொறி வெடிக்கு பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் வெடிகுண்டு ஒன்றை செயலிழக்கச் செய்ய முயன்ற இராணுவ பொறியியல் பிரிவு சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றையவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

கடந்த வாரம் பழுகாமம் இராணுவ முகாமிலிருந்து ரோந்து வந்த இராணுவத்தினர் வீதியோரத்தில் கைக்குண்டு போன்ற வெடிகருவி ஒன்றைக் கண்டனர். இதை செயலிழக்கச் செய்ய முயன்ற போது அது வெடித்ததில் இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த ஜி. எல். அமரசிங்க எனும் சிப்பாய் படுகாயமடைந்து பொலநறுவை ஆதாரவைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் தலையில் ஏற்பட்டிருந்த காயங்களினால் மரணமானார். காயமடைந்த மற்றைய சிப்பாய் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மகளை பெற்றோர் போராட்டத்தில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அம்பலவன் பொக்கணை என்ற இடத்தில் மகளைப் பெற்றோர் விடுதலைப் புலிகளுடன் இணைத்துள்ளனர்.

அம்பலவன் பொக்கணையில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கின்போதே மாலினி என்ற தமது மகளைப் பெற்றோர் விடுதலைப் புலிகளுடன் இணைத்துள்ளனர்.

இவர்கள் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரால் வரும் ஆபத்தை புறக்கணித்து விடக்கூடாது!

## அமரபுர தலைமைபீடாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

வெள்ளவத்தைஇன்றுதமிழர் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது மலைநாடும் தமிழரின் ஆதிக்கத்தின் கீழ் வந்துள்ளது. வடக்கு- கிழக்குமாகாணங்கள் இணைக்கப்பட்டால் பொலநறுவை, அனுராதபுர கூட தமிழர் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிடும் இந்த ஆபத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது என சமஸ்தலங்கா அமரபுரவின் தலைமைபீடாதிபதி நாகொட பாஞ்சாகீர்த்தி தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து கூறுகையில் வெள்ளவத்தை 386 ஏக்கர் பரப்பளவு உடையது இதில் 39 ஏக்கர் மட்டுமே சிங்களவரின் வசம் உள்ளது மீதி 347 ஏக்கரும் தமிழர், முஸ்லிம்களிடம் உள்ளன இதே நிலைதான்இன்று மலையகத்திலும் காணப்படுகிறது.

மலைநாட்டில் தமிழ் அரசாங்கம் ஒன்று உருவாகும் என

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# மேலும் 400 மாணவர்களை பல்கலையில் சேர்க்க முடிவு

92/93 கல்வி ஆண்டில் இலங்கை முழுவதிலுமுள்ள பல்கலைக் கழகங்களுக்கு மேலும் 400 மாணவர்களை சேர்த்துக்கொள்வது என பல்கலைக்கழகமானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மருத்துவம், பல்வைத்தியம், விவசாயம், பொறியியல், மிருகவைத்தியம், சட்டம், முகாமைத்துவம் ஆகிய பீடங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் தொகையில் இரண்டுவீத அதிகரிப்பு செய்யப் படவுள்ளதுடன் எஞ்சியோர் விளையாட்டு, கலை போன்ற துறைகளுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பொதுவேலை நிறுத்தத்தினால்

# பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குக!

– சந்திரிகா

1980 ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டமையினால் வேலை இழந்தவர்களுக்கு ஒய்வூதியமும், சம்பள நிலுவைகளும் வழங்கப்படவேண்டுமென்று மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்

இதற்கு தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்றும் இதற்காக 1980 ஜூலை வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகள் எதையும் மேற்கொண்டால் தாமும், தமது அமைச்சரவையும் முழு ஆதரவை வழங்குமென்றும் திருமதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வேதநாயகம் சாள்ஸ் என்பவரது அடையாள அட்டை (582142297) தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு அல்லது 11/1 சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [6527]

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6290)

### இரு பரீட்சைகள்

(கொழும்பு)

அரசாங்க, கூட்டுத்தாபன மாகாண எழுது வினைஞர் மற்றும் அதேபோன்ற தேவைகளுக்கு ஆட்களை சேர்ப்பதற்கு இனி இரு பரீட்சைகள் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஒருவர் தான் விரும்பிய பரீட்சைக்கு சமூகம் தரக்கூடிய வாய்ப்புகள் உண்டு என மேலும் தெரிவிக்கப்பட்டது.

### தொழில்நுட்பகல்லூரிக்கு விண்ணப்பிக்கலாம்

[யாழ்ப்பாணம்]

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் புதிய மாணவர்களை அனுமதிக்கும் இறுதி விண்ணப்ப திகதி இம்மாதம் 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் பல்வேறு துறை மாணவர்களுக்கும் கூடுதல் அனுமதி வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (05)

### வசதிகளற்ற நிலையில் பாடசாலை

(மானிப்பாய்)

சுமார் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் நவாலி மகாவித்தியாலயத்தில் போதிய தளபாட வசதிகள் இல்லாமலிருப்பதுடன், தமிழ், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்களும் நீண்ட நாட்களாக இல்லாமலிருப்பதாக அதிபர் திருமதி விசுவலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

## கொலரா ஐவர் அனுமதி

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் பரவிவரும் (கொலரா) வாந்தி பேதிநோயினால் கடந்தகிழமை மட்டும் 5க்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி நோய் மட்டுவில், சரசாலை, எழுது மட்டுவாழ், கச்சாய், கைதடி போன்ற பகுதிகளில் வேகமாக பரவி வருகின்றது. இந்நோயால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒருவர் நேற்று சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து யாழ். மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். (86)

கௌரி காப்பு

திருக்கோணமலை

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கேதார கௌரி விரதகாப்பு இம்முறையும் வழமை போல் யாழ். கல்வியங்காடு இலங்கைநாயகி அம்பாள் தேவஸ்தானத்தில் 13-11-93 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு விஷேச பூஜையைத் தொடர்ந்து வழங்கப்படும். இக்காப்பு யாழ். மாவட்டத்தில் வேறு எந்த இடங்களிலும் வழங்கப்படமாட்டாது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்

இங்ஙனம்
பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
(ஆலய நிர்வாகம்)
இலங்கைநாயகி அம்மன் கோவில்

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
நல்லூர். (6220)

### நாகர்கோயில்வடக்கு முருகையா தேவஸ்தான

## மகா கும்பாபிஷேகவிழா

நாகர்கோயில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான பஞ்சகுண்டபக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 10-11-1993 புதன்கிழமை காலை 8 46 மணி முதல் 10.42 வரையுள்ள தனுலக்கின சுபவேளையில் வண்ணை சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. அடியார்களின் எண்ணெய்க்காப்பு சாத்துதல் 8-11-93 நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற உள்ளது

இங்ஙனம்
தேவஸ்தான
திருப்பணிச்சபையினர்

(6522)

### பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினருக்குப்

## பாராட்டுக்கள்

எமது நிறுவனமான பருத்தித்துறை ''ஜானகி புடவையகத்தில் 04-10-93 இரவு கூரை பிரிக்கப்பட்டு சுமார் 2,00,000 ரூபா பெறுமதியான புடவைவகைகள் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. இதையடுத்து பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினரின் துரித நடவடிக்கைகளால் திருடன் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளைப் புடவைகளும் மீட்கப்பட்டு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் பாரப்படுத்தப் பட்டுள்ளது. திருடனைக் கைது செய்து கொள்ளைப் பொருட்களை மீட்பதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட பருத்தித்துறை தமிழீழ

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
14-9-1967

அமைதிப்படையாக வந்த
அரக்கர் அழிப்பில்
9-11-1987

### பரராசசிங்கம் யோகராசா

தெய்வேந்திரம்

எங்கள் அன்புமகனே
அன்பு பெற்றோர் மனங்கலங்கி
காலம் எல்லாம் கண்ணீர்விட
பாசம் உள்ள அண்ணன்மார் அக்காமார்
பரிதவித்திட
பரிவு மிக்கதம்பிமார் பதறிட
உற்றார் உறவினர் வாடிட நீ!
எமை விட்டு நீ மறைந்தாயோ!

இங்ஙனம்
உன்பிரிவால் வாடும்
-- குடும்பத்தினர்

தாவடி தெற்கு,
கொக்குவில்.
(6517)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
26- 11- 1960

தாயக மண்ணில்
09- 11- 1987

### லெப்டினன்ட் நகுலன்

[செல்லத்துரை சூரியப்பிரதாபன்]

அச்சமின்றி எழுந்தாய்
அண்ணன் அவன் வழிவந்தாய்
அதிரடியில் அனல் வீசி நின்றாய் - வந்த
அந்நியரை எதிர்த்து நின்றாய்
ஈழ நம் தேசமதை இலட்சியமாய்க் கொண்டிருந்தாய்
இந்தியரோடிடர் புரிந்து இன்னுயிரை நீ ஈர்ந்தாய்
விடுதலைக்கு வித்தான வீரவேங்கை நகுலா
விட்ட வழி நாம் தொடர்வோம் விண்ணின்று
பாராய்.

புலோப்பளை, — குடும்பத்தினர்.

## 6-வது ஆண்டுநினைவஞ்சலி



### வீரவேங்கை பஞ்சன்

செல்வநாயகம்-பஞ்சரத்தினம்

மலர்வு
10-05-1968

வீரச்சாவு
09-11-1987

செல்வநாயகம் மனையாள்
செய்த தவப் பயனதனால்
வல்லவன் வீரமைந்தன்
மண்ணுக்காய் மடிந்தான் காண்,
சொல்லினியன் பஞ்சரத்தினம்
தூய நினைவு இன்றாகும்
எல்லவரும் அவர் நினைவில்
இறையடியை இறைஞ்சுகின்றோம்

''சந்திரிகை''
சிவகுலவீதி
உரும்பராய் தெற்கு.

- குடும்பத்தினர்

(6519)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-11-09

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். நகுலன்** [செல்லத்துரை சூரியப்பிரகாசம் - புலோப்பளை மேற்கு - பளை]

யாழ் கட்டைப்பிராய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பஞ்சன்** [செல்வநாயகம் பஞ்சரத்தினம் - ''சந்திரிகை'', உரும்பராய் தெற்கு - யாழ்]

யாழ் - நல்லூர், மானிப்பாய்ப் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கணவன், மனைவி உட்பட 03 பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் இதே தினத்திலிருந்து 2 நாட்கள் இந்தியப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களில் கொலை செய்யப்பட்ட,

பட்டுள்ளது.

இம் முறை யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் பல்வேறு துறை மாணவர்களுக்கும் கூடுதல் அனுமதி வழங்கப் படும் எனத்தெரிவிக்கப்படு கிறது. (05)

## வசதிகளற்ற நிலையில் பாடசாலை

(மானிப்பாய்)

சுமார் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயி லும் நவாலி மகாவித்தியால யத்தில் போதிய தளபாட வசதிகள் இல்லாமலிருப்பது டன், தமிழ், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களுக் கான ஆசிரியர்களும் நீண்ட நாட்களாக இல்லாமலிருப்ப தாக அதிபர் திருமதி விசுவ லிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தளபாட, குடிநீர், மலசல கூட வசதி என்பன தொடர் பாகவும் இங்கு நிலவும் அசௌகரியங்கள் தொடர்பா கவும் யாழ். கல்வித் திணைக் களத்திற்கு எத்தனையோ தடவை முறையிட்ட போதும் பயன் எதுவும் கிட்ட வில்லை எனவும் தெரிவித் தார். [07]

## தற்கொலை அதிகரிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தி லுள்ள அக்கரைப்பற்று பகுதி யில் தற்கொலை செய்யும் சம் பவங்கள் பெருமளவில் அதி கரித்து வருவதாகவும், தற் போதைய புள்ளிவிபரங்களின் படி சராசரி ஒரு மணித்தியா லத்திற்கு ஒருவர் என்ற விகி தத்தில் இத் தற்கொலைச் சம் பவங்கள் இடம்பெற்று வருவ தாகவும் தெரிய வருகிறது. அக்கரைப்பற்று வைத்திய சாலைப் புள்ளிவிபரங்கள் மூலம் மேலும் இப் பகுதியி லுள்ள தமிழர் பிரதேசத்தில் தற்கொலைச் சம்பவங்கள் சமீபகாலத்தில் அதிகரிந்து இருப்பதாகவும் பெரும்பா லான மரணங்களுக்கு அலரிக் கொட்டைகளே காரணம் என் றும் தெரியவருகிறது.

இப்போது தற்கொலையி னால் மரணத்தை ஏற்படுத் திக் கொள்ளும் சம்பவங்களில் இலங்கை இரண்டாமிடத்தை யும், ஹங்கேரி முதலிடத்தை யும் பெற்றுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் 1989ஆம் ஆண்டில் 100000 பேருக்கு 49பேர் என்ற விகிதத்தில் தற்கொலை மரணங்கள் நேரிட்டது. ஆனால் இந்த ஆண்டில் இது வரை மட்டும் 6143 பேர் தற் கொலை சம்பவங்களால் உயி ரிழந்திருப்பதாகவும், இதில் வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணத்தை சேர்ந்தோரே அதிகம் என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

---

தேவஸ்தான
திருப்பணிச்சபையினர்

(6522)

---

பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினருக்குப்

## பாராட்டுக்கள்

எமது நிறுவனமான பருத்தித்துறை ''ஜானகி புடவையக''த்தில் 04-10-93 இரவு கூரை பிரிக்கப்பட்டு சுமார் 2,00,000 ரூபா பெறுமதியான புடவைவகைகள் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. இதையடுத்து பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினரின் துரித நடவடிக்கைகளால் திருடன் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளைப் புடவைகளும் மீட்கப்பட்டு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் பாரப்படுத்தப் பட்டுள்ளது. திருடனைக் கைது செய்து கொள்ளைப் பொருட்களை மீட்பதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினருக்கு எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதான வீதி,
பருத்தித்துறை.
9-11-1993

உரிமையாளர்
ஜானகி புடவையகம்
(6523)

---

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோ. கூ. சங்கம்

## முதலாவது கிளைக்குழுக் கூட்டம்

பின்வரும் திகதிகளில் முதலாவது கிளைக்குழுக் கூட்டம் இல. 201/1 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. சகல கிளைக் குழு உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**10-11-1993-ம் திகதி புதன்கிழமை:**

1-ம் கிளை மு. பகல் 9.00 மணிக்கும்.
2-ம் கிளை மு. பகல் 10.30 மணிக்கும்.
3-ம் கிளை மு. பகல் 11.30 மணிக்கும்.
5-ம் கிளை பி. பகல் 2.00 மணிக்கும்.
6-ம் கிளை பி. பகல் 3.30 மணிக்கும்.

**12-11-1993-ம் திகதி வெள்ளிக்கிழமை:**

7-ம் கிளை மு. பகல் 9.00 மணிக்கும்.
9-ம் கிளை மு. பகல் 10.30 மணிக்கும்.
10-ம் கிளை மு. பகல் 11.30 மணிக்கும்.
12-ம் கிளை பி. பகல் 2.00 மணிக்கும்.
13-ம் கிளை பி. பகல் 3.30 மணிக்கும்.

**14-11-1993-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை:**

14-ம் கிளை மு. பகல் 9.00 மணிக்கும்.
15-ம் கிளை மு. பகல் 10.30 மணிக்கும்.
16-ம் கிளை மு. பகல் 11.30 மணிக்கும்.
19-ம் கிளை பி. பகல் 2.00 மணிக்கும்.
20-ம் கிளை பி. பகல் 3.30 மணிக்கும்.

செயலாளர்,
புங். நயி. பல நோ. கூ. சங்கம்

(சி-7870)

---



தாயக மண்ணில்

09- 11- 1987

## லெப்டினன்ட் நகுலன்

[செல்லத்துரை சூரியப்பிரதாபன்]

அச்சமின்றி எழுந்தாய்
அண்ணன் அவன் வழிவந்தாய்
அதிரடியில் அனல் வீசி நின்றாய் - வந்த
அந்நியரை எதிர்த்து நின்றாய்
ஈழ நம் தேசமதை இலட்சியமாய்க் கொண்டிருந்தாய்
இந்தியரோடிடர் புரிந்து இன்னுயிரை நீ ஈர்ந்தாய்
விடுதலைக்கு வித்தான வீரவேங்கை நகுலா
விட்ட வழி நாம் தொடர்வோம் விண்ணின்று
பாராய்.

புலோப்பளை,
பளை.

- குடும்பத்தினர்.
(6511)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி இராசுகி விவேகானந்தா

(வேம்படி மகளிர் பாடசாலை O/L மாணவி)

திதி: 9-11-1993

உமது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
அங்கிள் அருணாசலம்
அன்ரி சிவலச்சுமி தேவி
மாமன் சோமசுந்தரம் (இணுவில்)
உற்றார், உறவினர்.

சுகி பவனம்
உரும்பராய் வடக்கு.

(6402)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-11-09

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். நகுலன்** [செல்லத்துரை சூரியப்பிரகாசம் - புலோப்பளை மேற்கு - பளை]

யாழ் கட்டைப்பிராய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பஞ்சன** [செல்வநாயகம் பஞ்சரத்தினம் - ''சந்திரிகை'', உரும்பராய் தெற்கு - யாழ்]

யாழ் - நல்லூர், மானிப்பாய்ப் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கணவன், மனைவி உட்பட 03 பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் இதே தினத்திலிருந்து 2 நாட்கள் இந்தியப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களில் கொலை செய்யப்பட்ட, தந்தை, மகன், மற்றும் இளம்பெண்கள், இளைஞர்கள் உட்பட 09 பொதுமக்கள்.

இணுவில் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அளவெட்டி டச்சு வீதியைச் சேர்ந்த மேற்பார்வையாளரும் நாடகக் கலைஞருமான பொது மகன்.

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **மிஸ்வின்** [ — — அக்கரைப்பற்று - அம்பாறை]

★ **ராசா** [ — — மலையகம் - கண்டி]

1990ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**பழனி** [கனகரட்ணம் கேதீஸ்வரன் - 16 டி, மல்லாவி - துணுக்காய்]

சாவகச்சேரிப் பகுதியில் எமது முகாம் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஜஸ்ரின்** [தியாகராசா சிறிஸ்கந்தராசா - 785, துணுக்காய் - மல்லாவி]

**2-ம் லெப். குட்மன்** [தாமோதரம்பிள்ளை பிரபாகரன் - இயற்றாலை, வரணி - கொடிகாமம்]

**லோலோ** [உடையார் மகாராசா - முதலியார் வீதி, அளவெட்டி வடக்கு - யாழ்]

**அலெக்ஸ்** [கிட்டினர் சுகந்தன் - மாசேரி, வரணி - கொடிகாமம்]

**ரவாஸ்/நவாஸ்** [இராசரத்தினம் சதானந்தன் - கைதடி மேற்கு - யாழ்]

**வல்லவன்** (சுப்பிரமணியம் அனுஷாந்தன் - இணுவில் தெற்கு - யாழ்)

கொக்குவில் கிழக்கு, குளக்கரை வீதிக் குடியிருப்பு - சாவகச்சேரி தபால்நிலையவீதி ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 பொதுமக்கள்.

1992ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் மதியழகன்/மகளன்** (நடராசா ரஜிஸ்குமார் - புதுக்கலட்டி - அல்வாய் தெற்கு)

ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**2-ம் லெப். அறிவழகன்/தயானந்தன்** (இராமையா மனோகரன் - கந்தசாமிகோயிலடி -கிளி.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/7876)

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

தூய சிந்தனை, மெய்மையை அறிந்து தெளியும் ஆற்றல் பெற்றது.

-ஆல்பெர்ட் ஐன்ஸ்டின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# முஸ்லிம் தலைவர்கள் சிந்திப்பதென்ன?

ஏகாதிபத்தியம், பேரினவாதம் என்பன தனியாக அவற்றிற்கு எதிராகச் செயற்படும் நாடுகளுக்கோ அன்றி இனங்களுக்கோ மட்டும் எதிரானவை அல்ல. அவை தம்முடன் இணைந்துள்ள நாடுகளுக்கும் - இனங்களுக்கும் ஆபத்தானவை. எதிர்ப்பவர்களை வெளிப்படையாக அழித்தொழிப்பதில் ஈடுபடும் ஏகாதிபத்தியங்கள் தம்முடன் கூட இருப்பவர்களை அவர்கள் அறியாமலே தமது செல்வாக்கிற்குள் உட்படுத்திக் கொள்கின்றன.

இது பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கும் பொருத்தமானதே ஆகும். அதாவது பௌத்த சிங்களப் பேரினவாதம் தனியாக தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் விரோதமானதே. ஆனால், இதனைக் கடந்த காலத்தில் முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்ததாக இல்லை. சிங்களப் பேரினவாதத்தின் செல்லப்பிள்ளைகளாக தொடர்ந்தும் இருந்துவிடலாம் என்றே அவர்கள் கருதினர்.

ஆனால், தற்பொழுது இதனை முஸ்லிம் தலைவர்கள் சிலர் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. இதன் அடிப்படையிலேயே சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமட் அண்மைக் காலமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் எனவும், அம்முயற்சியில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக உள்ளதாகவும் கூறிவருகின்றார்.

ஜனாப் முகமட்டின் இவ் அறிவிப்பானது முழுமையாக எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை தற்பொழுது வரையறுத்துக் கூறிவிட முடியாது. இருப்பினும், அவர் இனப்பிரச்சினை குறித்து அரசின் அணுகுமுறை, குறிப்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அணுகுமுறை இலங்கையில் உள்ள, குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்களை மிகவும் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதை உணர்ந்துள்ளார்.

சபாநாயகர் முகமட் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில், ''இனப்பிரச்சினை கண்டிப்பாகத் தீர்க்கப்பட வேண்டும். இல்லாதுவிட்டால் இலங்கைக்கே இது பெரும் ஆபத்து. இது தமிழருக்கு மட்டுமான பிரச்சினை அல்ல. முஸ்லிம்களுக்கும் இது ஒரு பிரச்சினை என்பதை உணர்ந்துள்ளோம்'' எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்

# தளபதி கிட்டு மரணத்திற்கு அனுதாபம் கூறாதது ஏன்?

## கருணாநிதியிடம் வை. கோபால்சாமி கேள்வி

(சென்னை)

இந்தியக் கடற்படையினர் கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவைக் கொன்றதை திரு. கருணாநிதியும் அவரின் கீழ் உள்ள தி.மு.கவும் கண்டிக்காதது ஏன் என்று தி.மு.கவின் முக்கிய பிரமுகரும், ராஜ்யசபா எம். பியுமான வை. கோபால்சாமி கேள்வி எழுப்பினார்.

அண்மையில் விழுப்புரத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம்ஒன்றில் உரை நிகழ்த்திய வை. கோபால்சாமி மேலும் கூறுகையில், தளபதி கிட்டுவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக தி.மு.கபொதுக்கூட்டம்ஒன்றையும் நடத்தாதது ஏன் என்றும் கேட்டார்.

இந்திய அமைதிகாக்கும் படையினரை தமிழரின் கொலையாளிகள் என்று வர்ணித்த அவர் சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கிய இந்தியப்படையினரை வரவேற்காதது கருணாநிதி செய்த சரியான காரியமாகும். ஆனால் தற்போது கருணாநிதி தனது சொந்த நலன்களுக்காக தமிழர்களுக்கு ஆதரவான பாதையிலிருந்து விலகிச்சென்றுள்ளார். தற்போது காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச்சேர அவர் முயலுகிறார். அவர்களுடன் சேர்ந்து அவர் விளையாடுகிறார் என்றும் தெரிவித்தார்.

## கிட்டுவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தோம்

—கருணாநிதி

[சென்னை]

கிட்டுவின் மரணத்தையிட்டு தி.மு.க. பெப்ரவரி மாதம் அனுதாபம் தெரிவித்தது என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

வை. கோபால்சாமி நிறைவேற்றுக்குழு, நிர்வாகக்குழு கூட்டங்களின்போது அனுதாபம் தெரிவிக்கச் சொல்லி யோசனை தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

'நாம் தமிழீழ போராட்டத்திற்கான ஆதரவை கைவிடவில்லை' என்று கூறிய கருணாநிதி, ராஜீவ் கொலையின்பின் விடுதலைப் புலிகளோடு தனக்கோ தன் கட்சிக்கோ எந்தத் தொடர்புமில்லை என்றும் தெரிவித்துள்ளார்

## அமைச்சரை பதவி நீக்க அதிகாரம் உண்டா?

மாநில அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒருவரை அந்த மாநில ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியுமா என்பது பற்றி தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி பிரபல வழக்கறிஞர் என். ரி. ராகவாச்சாரியுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஆளுநர் சென்னாரெட்டியை சூப்பர் முதலமைச்சர்போல நடந்து கொள்கிறார் என்று மாநில அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் விமர்சித்து இருப்பது அரசியல் சட்டப்படி மிகப்பெரிய குற்றமாகும் எனவும், அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒருவர் இவ்வாறு குறிப்பிடக் கூடாது எனவும், அரசியல் சட்டத்தை மீறும் செயல் எனவும் ஆளுநர் சென்னாரெட்டி கருதுகிறார். இது பற்றி இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவிடமும் அவர் புகார் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சர்மா இது தொடர்பாக வேதனை தெரிவித்ததாகவும், இப்புகார் குறித்து நடவடிக்கை எடுக்கமுடியுமாஎன்பது பற்றி ஆராயும்படி மத்திய சட்டத்துறையிடம் பபணிந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## கத்திக்குத்து கொலை; மூவருக்கு ஆயுள் தண்டனை

(சென்னை)

அகதிமுகாமில் இலங்கைத் தமிழர் ஒருவரை குத்தியதற்காக மூன்று இலங்கைத் தமிழர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது.

கும்முடிபூண்டி அகதிமுகாமில் 300 ரூபா பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழுந்த சர்ச்சையினால் இக் கத்திக்குத்து நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தில் அன்ரன் அல்லது அந்தோனி (50), லோகு அல்லது லோகநாதன், யோகநாதன் அல்லது யோகன் அல்லது யோகராசா ஆகியோருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# மூன்று தமிழ் இளைஞர்கள் சுற்றிவளைப்பில் கைது

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து புத்தளம் உடப்பு பகுதி மக்கள் குடியிருப்புகளை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதுடன் மூன்று தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு என்னும் கிராமத்தை சுற்றி வளைத்த படையினர் வீடு வீடாகச் சென்று அங்கிருந்த அனைவரையும் காளியம்மன் கோவிலுக்கு வருமாறு அழைத்தனர். அங்கு திரண்ட மக்களை உள்ளூர் வாசிகள், வெளியூர் வாசிகள்என தனித்தனியாக பிரித்து விசாரணை நடத்தினர். இதனை அடுத்து மூன்று தமிழ் இளைஞர்களை கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர்.

# ஆசிரியருக்கு நட்டஈடு எம்.பிக்கு நீதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஐ. தே. கவைச் சேர்ந்தவரான அநுராதபுர மாவட்ட முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஒரு மில்லியன் ரூபா நட்டஈடு செலுத்தும்படி அநுராதபுர மாவட்ட நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். தயாரத்தினா வலகம்பாடு என்னும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாடசாலை ஆசிரியரான சோமசாரகே குணபால வனசிங்க என்பவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவ் வழக்கில் தயாரத்தினா வலகம்பாடு குற்றவாளியாக காணப்பட்டதை தொடர்ந்தே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# கொழும்பு செல்வதற்கு பதிவு செய்தோர் கவனத்திற்கு

(குருநகர்)

கொழும்பு செல்வதற்காக சென்ற 20-10-93 அன்று பதிந்தவர்களில் பின்வருவோரைத் தவிர கையொப்பம் இடாத அனைவரும் கையொப்பம் இடுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்திற்குச் செல்லுமாறும் மேலும் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்காக தமது காரியாலயத்திற்குச் சமுகம் அளிக்கும்படியும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

சமுகம் அளிக்கத் தேவையற்றோர் விபரம் வருமாறு;

1. மேரி யோசப்பின் யோசப் 2. நடராஜா கந்தஞானம், 3. றூபேந்திரன் தீப சாந்தினி 4. வேலாயுதம் சுப்பிரமணியம் 5. செல்வி கார்த்திகா கண்ணன், 6. கண்ணதாசன் பாலசுப்பிரமணியம், 7. சின்னத்துரை வைரமுத்து, 8. ராகுலதாஸ் அழகரட்ணம், 9. சங்கீதா கருணாகரன், 10. சிந்து கணேசமூர்த்தி, 11. ஈஸ்வரி தேவி தவரட்ணம், 12. தங்கரட்ணம் அம்பலவாணர் 13. தனுசியா சிறிபாலன்.

## பொதுமக்கள் புகார்

தென்மராட்சி கிழக்கு பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கமொன்றில் சேதமான நிறுவை அளவைக் கருவி பாவிக்கப்பட்டு பொருள்கள் வழங்கப்படுவதாக பொது மக்கள் புகார் செய்துள்ளனர். இந்த நிறுவை அளவைக் கருவியின் ஒரு பக்கத் தட்டு சேதமடைந்திருப்பதால் வழங்கப்படும் பொருட்கள் உரிய நிறையில் இருப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

# கிழக்கிலிருந்து அம்பாறை; பிரித்தெடுக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிராந்திய இறைவரித் திணைக்கள அலு...

1976ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மட்டக்களப்பு பிராந்தியஇறைவரித் திணைக்...

எனக் கூறப்பட்டபோதும் அதுநடைபெறவில்லை அத்துடன் மட்டக்களப்பில் ஏற்...

## புலிகளை

...வும், இவர்கள் பூரணஇராணுவப் பயிற்சியை பெற்றபின்னர் தமது கிராமங்களில் சேவையாற்றுவார்கள் என்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு சேவையில் உள்ளவர்கள் விரும்பினால் இராணுவத்தில் சேரமுடியும் என்றும், இவர்களின் விசேட தகைமைக்கு அமைய பதவிகள் வழங்கப்...

## கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 10ஆம், 11ஆம் ஆண்டுகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று காலை 8மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று கோட்டப் பிர...

தெரிகின்றது. இதன் அடிப்படையிலேயே சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமட் அண்மைக் காலமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் படவேண்டும் எனவும், அம்முயற்சியில் ஈடுபட்டு யாழ்ப் பாணம் சென்று விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக உள்ளதாகவும் கூறிவருகின்றார்.

ஜனாப் முகமட்டின் இவ் அறிவிப்பானது முழுமை யாக எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை தற்பொழுது வரையறுத்துக் கூறிவிட முடியாது. இருப்பினும், அவர் இனப்பிரச்சினை குறித்து அரசின் அணுகுமுறை, குறிப்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வின் அணுகுமுறை இலங்கையில் உள்ள, குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்களை மிகவும் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதை உணர்ந்துள்ளார்.

சபாநாயகர் முகமட் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி யில், ''இனப்பிரச்சினை கண்டிப்பாகத் தீர்க்கப்பட வேண் டும். இல்லாதுவிட்டால் இலங்கைக்கே இது பெரும் ஆபத்து. இது தமிழருக்கு மட்டுமான பிரச்சினை அல்ல. முஸ்லிம்களுக்கும் இது ஒரு பிரச்சினை என்பதை உணர்ந்துள்ளோம்'' எனத் தெளிவாகச்சுட்டிக் காட்டியுள் ளமை, சிங்களப் பேரினவாதத்தால் முஸ்லிம்களுக்கு ஏற்படும் ஆபத்தை இவர் உணரத் தொடங்கிவிட்டதையே காட்டுவதாகவுள்ளது.

ஜனாப் முகமட் வெளிப்படுத்தியுள்ள இவ் அச்சத்தை முஸ்லிம் காங்கிரசும் ஓரளவு வெளிகாட்டியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான மருதூர்கனி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ''கிழக்கில் தேர்தல்களை நடத்த அரசு அவசரப் படுவது முஸ்லிம்களைப் பலிக்கடா ஆக்கவா?'' எனக் கேள்வி எழுப்பியுள்ளமை இதனையே குறிப்பதாக வுள்ளது.

முஸ்லிம் தலைவர்கள் சிலர் கடந்த காலத்திலும் இவ்வாறு பேசியதுண்டு. ஆனால் அரசியல் லாபம், கிட்டும் என்ற நிலை ஏற்படும் போது, மக்களின் பிரச் சினைகளை மறந்துவிட்டு சுயலாபம் தேடிக்கொண்டது தான் வரலாறு. இந்நிலையில் சிங்களப் பேரினவாதம் தமது ஆக்கிரமிப்பிற்கும், தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கும் அவர்களை பயன்படுத்திக் கொண்டது. இதன் காரண மாக தமிழ் - முஸ்லிம் மக்கள் உறவு என்றுமில்லாதவாறு பாதிப்படைந்தது.

ஆனால், சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம்களைப் பயன்படுத்திய போது முஸ்லிம் மக்களுக்கு பேரினவாதத்தால் ஏற்பட்டுவரும் ஆபத் தையும், பாதுகாப்பு இன்மையும் முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்திருந்தார்களா? உணராமல் செயற்பட்டார்களா என்பது கேள்வியே. ஆனால் முஸ்லிம்கள் வெகுவாக இத னால் பாதிக்கப்பட்டனர் என்பதே உண்மை. எடுத்துக்காட் டாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களும், சிங்களவர் களும் சேர்ந்து தமிழ் மக்களை அடித்து விரட்டிய பின்னர் தமிழ் மக்களின் நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண் டவர்கள் சிங்களவர்களே ஒழிய முஸ்லிம்கள் அல்ல. இதனால், நேரடியாக சிங்களவர் ஆதாயம் பெற்ற வேளை, முஸ்லிம்கள் லாபம் பெறாதது மட்டுமல்ல. ஒருவிதத்தில் நட்டமும் அடைந்தனர். அதாவது அம்பாறை மாவட்டத்தில் அவர்களின் இனவிகிதாசாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அம்மாவட்டத்தில்இரண்டாம் நிலையை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதாவது, சிங்களப் பேரினவாதம் கடந்த காலத்தில் முஸ்லிம்களை தமிழருக்கு எதிராக நன்கு பயன்படுத்திக் கொண்டது. இதனை தற்பொழுது முஸ்லிம் தலைவர்கள் ஓரளவு உணர்ந்துள்ளதுபோல் தெரிகிறது. ஆனால், இது எந்தளவிற்கு உறுதியானது முஸ்லிம் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்பதை இனப்பிரச்சினை குறித்து அண்மைக்காலங்களில் அவர்கள் எடுக்கும் முடிவுகளே தீர்மானிக்கும் என்பதே நிஜம்.

---

(சென்னை)

அகதிமுகாமில் இலங்கைத் தமிழர் ஒருவரை குத்தியதற்காக மூன்று இலங்கைத் தமிழர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது.

கும்முடிபூண்டி அகதிமுகாமில் 300 ரூபா பணம் கொடுக் கல் வாங்கல் தொடர்பாக எழுந்த சர்ச்சையினால் இக் கத்திக்குத்து நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தில் அன்ரன் அல்லது அந்தோனி (50), லோகு அல்லது லோகநாதன், யோகநாதன் அல்லது யோகன் அல்லது யோகராசா ஆகியோருக்கு ஆயுள்தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

தயாள் சர்மாவிடமும் அவர் புகார் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சர்மா இது தொடர்பாக வேதனை தெரிவித்ததாகவும், இப்புகார் குறித்து நடவடிக்கை எடுக்கமுடியுமா என்பது பற்றி ஆராயும்படி மத்திய சட்டத்துறையிடம் பபணிந்திருப்பதாகவும் கூறப் படுகின்றது.

அளிக்கும்படியும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொள் கின்றார்.

சமூகம் அளிக்கத் தேவையற்றோர் விபரம் வருமாறு;

1. மேரி யோசப்பின்யோசப் 2. நடராஜா கந்தஞானம், 3. றூபேந்திரன் தீப சாந்தினி 4. வேலாயுதம்சுப்பிரமணியம் 5. செல்வி கார்த்திகா கண்ணன், 6. கண்ணதாசன் பால

யிலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கமொன்றில் சேதமான நிறுவை அளவைக் கருவி பாவிக்கப்பட்டு பொருள்கள் வழங்கப்படுவதாக பொது மக்கள் புகார் செய்துள்ளனர். இந்த நிறுவை அளவைக் கருவியின் ஒரு பக்கத் தட்டு சேதமடைந்திருப்பதால் வழங்கப் படும் பொருட்கள் உரிய நிறையில் இருப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

# கிழக்கிலிருந்து அம்பாறை; பிரித்தெடுக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிராந்திய இறைவரித் திணைக்கள அலுவலகத்தின் கீழ் நிருவகிக்கப் பட்டுவந்தஅம்பாறைமாவட்ட இறைவரிப் பணிகள் பதுளை பிராந்திய அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு அலுவலகத்தில் இருக்கும் அம் பாறை மாவட்ட வரி செலுத் துனர்களின் வருமானவரி மற்றும் வியாபாரப் புரள்வு வரி ஆகியவற்றிற்கான கோவைகளை பதுளை அலுவல கத்திற்கு உடனடியாகக் கையளிக்குமாறும் திணைக்கள தலைமையக ஆணையாளர் நாயகம் உத்தரவு பிறப்பித் துள்ளார்

1976ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மட்டக்களப்பு பிராந்தியஇறைவரித் திணைக் கள அலுவலகத்தின் கீழ் பொலநறுவை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பணி கள் கொண்டு வரப்பட்டிருந் தன. எனினும் 1989ஆம் ஆண்டில் மாகாணசபை அமு லுக்கு வந்ததைத்தொடர்ந்து பொலநறுவை மாவட்டப் பணிகள் அநுராதபுர அலுவ லகத்திற்கு இடம் மாற்றப்பட் டது திருக்கோணமலை மாவட்டப் பணிகள் அநுராதபுரத் திலிருந்து விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் அதுநடைபெறவில்லை அத்துடன் மட்டக்களப்பில் ஏற்கனவே இயங்கிவந்த தேசிய இளைஞர் சேவைமன்ற மாகாண அலுவலகம்நீர்வழங்கல்வடிகால்சபையின்அலுவலகம்நெல் சந்தைப்படுத்தும் சபையின் பிராந்திய அலுவலகம்என்பன ஏற்கனவே அம்பாறைக்கு இட மாற்றப்பட்டிருப்பதுடன் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகம் கொழும்பில் இயங்கி வருவதும் தெரிந்ததே.

## பெயர்சூட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் இந்துக் கல்லூரி பெயர் சூட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் சு. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதமவிருந்தின ராக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

## உதைபந்தாட்டப் போட்டி

வலிமேற்கு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்கட்கிடையேயான உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியின் 2-ம் சுற்று போட்டிகள் ஆரம்ப மாகியுள்ளன. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இப் போட்டித் தொட ரின் இன்றைய போட்டிகளின் விபரம்:

மாலை 3.00 மணிக்கு இளவாலை யங் கென்றிஸ் அணி எதிர் சுழிபுரம் சத்திய அணி.

மாலை 4.00 மணிக்கு அளவெட்டி விநாயகர் அணி எதிர் மானிப்பாய் சில்வஸ்ரர் அணி.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விடுதியில்

## ஆசிரியையின் சங்கிலி இனந்தெரியாதவரால் அறுப்பு

கோப்பாய் ஆசிரியர் பயிற் சிக் கல்லூரியில் பயிற்சி ஆசிரியையின் தங்கச் சங்கிலி அறுக் கப்பட்டது. மாலை சுமார் 7.30மணியளவில் ஒரு கையில் விளக்கும் மற்றைய கையில் தண்ணீர் வாளியுடனும் விடுதியிலிருந்து வெளி வராந்தாவுக்கு வந்தபோதே சங்கிலி அறுக்கப்பட்டது. மறையிருட் டில் திடீரென்று பின்புறமாக வந்த ஒருவர், அந்த ஆசிரியையின் கழுத்திலிருந்த சுமார் இரண்டரைப் பவுண் சங்கிலியை அறுத்துக்கொண்டு கல்லூரி வளாகத்திலிருந்து தப்பிவிட்டதாகத் தெரியவரு கிறது. திருட்டுச் சம்பவம் நடைபெறும்போது ஏனைய பயிற்சி ஆசிரியைகள் உணவு விடுதியில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இதேமாதிரியான திருட்டுச் சம்பவம் ஒன்று ஏற்கனவே இப்பகுதியில் நடந்துள்ளது. கல்லூரிக்குப் பக்கத்து வீட்டில் தங்கியிருந்த பயிற்சி ஆசிரியை யிடமிருந்து இருட்டு வேளை யில் சங்கிலி அறுக்கப்பட்டது. சம்பவதினம் அந்த வீட்டில் பயிற்சி ஆசிரியர் ஒரு வயோதி பரின்உதவியுடன்இருந்தாராம்

## எறிகணை வீச்சு

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறப்பகுதி இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாவற்குளம், பழைய ஊர், இரண்டாம் யுனிற் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து நேற்று அதிகாலை 5-00 மணிமுதல் இவ்வாறான எறி கணைத்தாக்குதலும் துப்பாக் கிப் பிரையோகமும் மேற் கொள்ளப்பட்டன.

## குமணவில் முட்டை

காங்கசன்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் நேற்று பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்தது. அக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்ப மாகின.

இக் கப்பலில் தனியார் வர்த் தகருக்கு சொழும்பில் இருந்து வெற்றிலை, உருளைக்கிழங்கு, முட்டை, தீப்பெட்டி ஆகியன வும் எடுத்து வரப்பட்டன.

இதற்கிடையில் 'குமண' கப்பலில் தனியார் ஒருவருக்கு எடுத்து வரப்பட்ட வெற்றிலை பழுதடைந்த நிலையிலேயே வந்துசேர்ந்தது. ஒரு தொகை வெற்றிலை கடலில் தூக்கி வீசப்பட்டது. (யோ)

---

புலிகளை

வும், இவர்கள் பூரணஇராணுவப் பயிற்சியை பெற்றபின்னர் தமது கிராமங்களில் சேவை யாற்றுவார்கள் என்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு சேவையில் உள்ளவர்கள் விரும்பினால் இராணுவத்தில் சேரமுடியும் என்றும், இவர்க ளின் விசேட தகைமைக்கு அமைய பதவிகள் வழங்கப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு மேலும் பல வசதிகள் செய்து கொடுக்க தாம் முயற்சிப்ப தாகவும் மிக விரைவில் இவை செய்துகொடுப்பதற்கு திட்டம் வகுக்கப்படும் என்றும், ஒவ் வொரு முகாமிலுமுள்ள உயர் அதிகாரிகள் இராணுவத்தினர் களின் தேவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், இவை தொடர்பாக குறிப்பிட்ட கால பகுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி வேண்டுகோள்விடுக்கப்பட்டுள் ளது எனவும் தெரிவித்தார்.

---

தமிழரால்

1983 ஆம் ஆண்டிலேயே கூறினேன்கண்டிபௌத்தபீடங்கள் தமிழ் அரசிடம் செல்லும். மேலும் தலதா மாளிகை கூட தமிழ் அரசாங்கத்திடமே செல் லும் ஒரு நிலை இன்று உள் ளது. இந் நிலையை சகல சிங் கள மக்களும் விழிப்புடன் இரு ந்தே தடுக்க வேண்டும். இதனை ஒருவரும் புறக்கணிக் கக் கூடாது.

அன்று யாழ்ப்பாணத்தில் 21 பௌத்தநிலையங்கள் இருந் தன. ஆனால் இன்று ஒரே யொரு பௌத்த நிறுவனம் மட்டுமே உண்டு. தற்போது வடபகுதிக்கு நாம் ஒருவரும் செல்லமுடியாது.

வடக்கு கிழக்கு இணைந்து இருக்குமாயின் நாளை பொல நறுவையும், அநுராதபுரமும் தமிழர் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடும் எனவே சகல பௌத்த பீடங்களும் இதனைப் பொறுப் பேற்று விழிப்புடனிருந்து தடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

---

அகன்ற

நடவடிக்கை சிறப்புச் செய்தி யாக இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது அகன்ற திரையில் (புரொஜெக்ற்றர்) மூலம் காண்பிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 10ஆம், 11ஆம் ஆண்டுகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங் கொன்று இன்று காலை 8மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடை பெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள் ளார்,

## சம்பளக் கொடுப்பனவு

லங்கா சீமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் புரட்டாதி 93, ஐப்பசி 93 ஆகிய இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் எதிர்வரும்10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்ப் பாணம் ஆஸ்பத்திரிவீதி வர்த் தக வங்கியில்வைத்து பிற்பகல் 12.00 மணிமுதல் மாலை4.00 மணிவரை வழங்கப்படும் என கணக்காளர்அறிவித்துள்ளார்.

---

ராணுவ

றுதான் ஆனால் இராணுவ நடவடிக்கை தொடர்பான கருத்துக்களை வெளியிட பத் திரிகைகளுக்கு உரிமை உண்டு இராணுவத்திற்கு இழப்புகள் ஏற்படாது தடுப்பதும் வீண் விரயத்தைத் தடுப்பதும் இரா ணுவ அதிகாரிகளின் கடமை.

இராணுவமும் அரசாங்க மும் எடுக்கும் தீர்மானம் தொடர்பாக சகல விடயங்கள் பற்றியும் கருத்துக்கூறுவதற்கு மக்களுக்கு பூரண உரிமை உள்ளது என்றார்.

---

மீன்பிடிக்கச்

தப்பி வந்தோம்''

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

கடலில் சிறிது தூரம் நகர்ந்து பார்த்தபொழுது நாம் நின்ற பகுதியில் பெருந்தொகையான ராணுவத்தினர் கைகளில் டோச்லைட்களுடன் நடமாடுவது தெரிந்தது. இதனிடையில் ரவீந்திரன் தனக்குச் சூடு பிடித்துவிட்டதாகக் கூறி முழங்கால் அளவு நீரில் குந்தி இருக்க முனைவதைக் கண்டேன்'' இவ்வாறு கொலின் என்னும் மீனவர் மேலும் தெரிவித்தார் (21)

# அல்டி - ALDI

**தீபாவளி மலிவு விற்பனை**

நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை

★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,

★ சுவர்மணிக் கூடுகள்

முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

★ அல்டி ★ 269/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7861)


## பலாலி படைமுகாமிலிருந்து பண்ணாகம் மீது ஷெல்வீச்சு

### பல வீடுகள் சேதம்

(தொல்புரம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் பலாலி இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சுழிபுரம் பண்ணாகம் பகுதியில் குடிமனைகள் மீது வீழ்ந்து வெடித்ததினால் பல வீடுகள் சேதமடைந்தன.

கடந்தஞாயிறு காலை 7.50 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது இரண்டு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. முதலாவது ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பண்ணாகம் பொன்னம்பலம் விக்னேஸ்வரன் என்பவரினது வீடு பலத்த சேதத்திற்குள்ளாகியதோடு, தென்னைமரமொன்றும், பல பயன் தரு மரங்களும், பலத்த சேதமடைந்துள்ளன. அத்தோடு மேற்படி ஷெல் சிதறல் பட்டு பெரியதம்பி சனகரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கறவைப்பசு ஒன்றுக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டாவது ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பண்ணாகம் விசுவத்தனை வீதி செல்லப்பா குணரத்தினம் என்பவரது வீடும், சடாசிவம் கைலாசபிள்ளை என்பவரினது வீடும் சிறு சேதங்களுக்கு உள்ளாகின. இங்குள்ள பனைமரம் ஒன்று தலைப்பாகம் சிதறிய நிலையிலும், வேலிகள் சாய்க்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

இவ்விரு சம்பவங்களிலும் வீட்டில் இருந்த அனைவரும் காயங்கள் எதுவுமின்றி தப்பித்துக்கொண்டனர். (41)

## இலங்கை ஆசிரியர்சங்க உத்தியோகத்தர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கம் யாழ். மாவட்டக்கிளை வடமாகாண ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் - வே. சிவராசா, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், பொதுச் செயலாளர் - த. தேவராஜா, கொக்குவில் இந்துக் கல்லூரி, பொருளாளர் மு. தியாகராஜா பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, செயற்குழு உறுப்பினர்கள் ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். மத்திய செயற்குழு உறுப்பினராக த. தேவராசா, கா. சிவபுத்திரன், வே. சிவராசா ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.


**பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்**

**கல்வியாண்டு 1994/95**

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

**5-12-1993-ல் ஆரம்பமாகின்றன**

❋ கலைமாணி B. A.

❋ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 2-12-1993**

விண்ணப்பப் படிவத்தினையும் விபரத் திரட்டினையும் பெற விரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ / தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு :

உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)


## பாடசாலை ரீதியிலான உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பின்வரும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவு யாழ். இந்துக்கல்லூரியை எதிர்த்து புங்குடுதீவு மகாவித்தியாலயமும். 17 வயதுப் பிரிவு நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தை எதிர்த்து புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மோதுகின்றன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவு யூனியன் கல்லூரியை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும், 17 வயதுப் பிரிவில் உரும்பராய் இந்துவை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும், 15வயதுப் பிரிவில்புனித ஜேம்ஸ் ம. வித்தியாலயத்தை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதும்.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவில் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தை எதிர்த்து உடுப்பிட்டி அ. மி. கல்லூரியும் மோதும்.

## கருத்தரங்கு


இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலைய கட்டட மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு வாத்திபேதி பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (யோ)


விவசாயிகளே!
தொழிற்சாலை உரிமையாளர்களே!
இயந்திரப் பாவனையாளர்களே!

**எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்**

பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான

குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது




**உங்கள்**

- நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
- மின் பிறப்பாக்கியை இயக்க



## 7-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 2906 | 3256 | 3396 | 3464 |
| 2913 | 3283 | 3402 | 3510 |
| 3144 | 3295 | 3405 | 3555 |
| 3146 | 3310 | 3422 | 3558 |
| 3147 | 3319 | 3432 | 3590 |
| 3150 | 3323 | 3436 | 3595 |
| 3151 | 3335 | 3455 | 3600 |
| 3156 | 3339 | 3458 | 4035 |
| 3164 | 3351 | 3460 | 4046 |
| 3165 | 3363 | 3461 | 4048 |

## மரண அறிவித்தல்கள்

### நிமலராஜா ஜெயராணி (வவி)

மணிப்புரியைச்சேர்ந்த நிமலராஜா ஜெயராணி (வவி) 8-11-1993- (நேற்று) சிவபதமடைந்துவிட்டார். இவர் நிமலராஜா (சர்மிளா ஸ்ரோஸ்) உரிமையாளரின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், கனகராசா - கமலம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சர்மிளா, சாளினி, சாருஜன், சரன்ஜா, நிரோஜன, ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேந்திரன்




**உங்கள்**

- ∴ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
- ∴ மின் பிறப்பாக்கியை இயக்க

**மரக்கரி அல்லது**
**சிரட்டைக்கரி மட்டுமே**
**கொண்டு சக்தியைத்**
**தரவல்லதுதான்**




(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

## இரகசியம் ஒன்றுமில்லை.

ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தி தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லது. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை இயக்கவல்ல ஆக்கிவாயுவை உற்பத்தி செய்கின்றன.

உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆககிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும், முதற்கட்டமாக வூல்சிலி(Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக்கொள்ளலாம் பொருத்தவேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்

**எல்லாநாட்களிலும் காலை 10மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.**

**எமது அலுவலகம்**

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி தாவடி

(சி-7859)

## 7-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 2906 | 3256 | 3396 | 3464 |
| 2913 | 3283 | 3402 | 3510 |
| 3144 | 3295 | 3405 | 3555 |
| 3146 | 3310 | 3422 | 3558 |
| 3147 | 3319 | 3432 | 3590 |
| 3150 | 3323 | 3436 | 3595 |
| 3151 | 3335 | 3455 | 3600 |
| 3156 | 3339 | 3458 | 4035 |
| 3164 | 3351 | 3460 | 4046 |
| 3165 | 3363 | 3461 | 4048 |


8-வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள். பங்கு பற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் or பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE JAFFNA.

(சி/7879)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்: 24 – 8 – 1973



தாயக மண்ணில்: 09 – 11 – 1990

### லெப்டினன்ட் நவாஸ்
[ இராசரத்தினம் சுதானந்தன் ]

புன்னகை பூத்த முகத்தினன்
புயலாய் எழுந்த புலியிவன்
தன்னையே மண்ணுக்காய் தந்தவன்
தமிழீழமே தாகமாய் கொண்டவன்

சொந்தமண் காத்திட எழுந்தவன்
அந்த மண்ணுக்கே விதையானவன்
ஏங்கிய விழிகளில் நீரையே
சொரிந்துமே நிற்கின்றோம்
உன் உடன் பிறப்பு நாம்
தாங்கிய கனவினை தீர்க்கவே
உன்வழி தொடர்கின்றோம் மைந்தனே.

கைதடி மேற்கு,
'' நவாஸ் வீதி ''
கைதடி.

– குடும்பத்தினர்
(6493)

யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)

# மரண அறிவித்தல்கள்

## நிமலராஜா ஜெயராணி (வவி)

மணிப்புரியைச்சேர்ந்த நிமலராஜா ஜெயராணி (வவி) 8-11-1993- (நேற்று) சிவபதமடைந்துவிட்டார். இவர் நிமலராஜா (சர்மிளா ஸ்ரோஸ்) உரிமையாளரின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், கனகராசா – கமலம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சர்மிளா, சாளினி, சாருஜன், சரன்ஜா, நிரோஜன, ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேந்திரன் (யாழ். ப. நோ. கூ. சங்கம்), இந்திராணி, செல்வராணி, விஜயராணி(ஆசிரியை யாழ்துரையப்பாமகாவித்தியாலயம்) ஜீவராணி,சுரேந்திரன் (நியூ விக்ரர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசூரியர், நாகேஸ்வரி, தவராஜசிங்கம், புஸ்பராணி ஆகியோரின் பெறாமகளும், பாலசிங்கம் புனிதம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம், அன்னம்மா தம்பதிகளின் பேர்த்தியும், அமுதா, தேவராஜா, பாலசுப்பிரமணியம் (தாசன் அச்சகம்), சிறிதரன் (கயிங்தன் ஸ்ரோஸ் மணிப்புரி), சிறிக்குமார், சாந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 9-11-93 (இன்று) மாலை 2 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிமலராஜா
(கணவர்)

282, 9-ம் குறுக்கு, மணிப்புரி,
கொழும்புத்துறை.

(6533)

## துரைச்சாமிஐயர் தியாகராசாஐயர்

[இராசா ஐயர்]

[ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆதீனம்]

புன்னாலைக் கட்டுவனைப் பிறபபிடமாகக் கொண்ட தியாகராசா ஐயர் 08. 11. 93ல் காலமானார். இவர் காலஞ்சென்ற பாலாம்பிகை அம்மாவின் அன்புக்கணவரும், ஞானசேகரஐயர் (உதவிவைத்தியஅதிகாரி,கண்டி), கெங்காதரக் குருக்கள் (விநாயகர் தேவஸ்தானம்), சுவாமிநாதஐயர் (இலங்கை வங்கி- திருக்கோணமலை), லலிதாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானலட்சுமி, விஜயலட்சுமி, நிர்மலா, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜேஸ்வரன், சர்வேஸ்வரன், கமலேஸ்வரன், பாலேஸ்வரன், பாலச்சந்திரன், வசுந்தரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09. 11. 93 [இன்று] செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் ஈவினை இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
கெங்காதரக்குருக்கள்
(மகன்)

[6532]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.